# Trichy Regional Hub Inauguration

News Clippings

# Print

| | | |
|---|---|---|
| 1 | 23rd September 2025 | The Hindu |
| 2 | 23rd September 2025 | Times of India |
| 3 | 23rd September 2025 | The New Indian Express |
| 4 | 23rd September 2025 | Dinathanthi |
| 5 | 23rd September 2025 | The Hindu Tamil |
| 6 | 23rd September 2025 | Dinamani |
| 7 | 23rd September 2025 | Dinamalar |
| 8 | 23rd September 2025 | Dinakaran |
| 9 | 22nd September 2025 | Times of India |
| 10 | 22nd September 2025 | Dailyhunt |

# Online Media

| | | |
|---|---|---|
| 1 | 23rd September 2025 | The Hindu |
| 2 | 23rd September 2025 | Times of India |
| 3 | 23rd September 2025 | The New Indian Express |
| 4 | 23rd September 2025 | Dinathanthi |
| 5 | 23rd September 2025 | The Hindu Tamil |

# Electronic Media

| | |
|---|---|
| 1 | Thanthi TV |
| 2 | Polimer News |
| 3 | News18 Tamil Nadu |

THE HINDU

# iTNT launches regional hub in Tiruchi to boost startup ecosystem

This regional technology hub is the first centre of iTNT in the State outside Chennai

**The Hindu Bureau**
TIRUCHI

The Tiruchi regional centre of Tamil Nadu Technology (iTNT) Hub was launched at University College of Engineering, Bharathidasan Institute of Technology Campus, Anna University on Monday.

The regional technology hub aims to strengthen the start-up ecosystem in central districts.

The Tiruchi Regional Hub, the first centre of iTNT outside Chennai, was inaugurated by Palanivel Thiaga Rajan, Minister for Information Technology and Digital Services (IT and DS), in the presence of Anbil Mahesh Poyyamozhi, School Education Minister, Brajendra Navnit, Principal Secretary, IT and DS, Vanitha Venugopal, Chief Executive Officer, iTNT Hub, Asit Kumar Barma, director, Bharathidasan Institute of Management (BIM), Tiruchi, and senior Anna University faculty members.




Minister Palanivel Thiaga Rajan at the inauguration of Tiruchi Regional Hub at University College of Engineering, Bharathidasan Institute of Technology Campus, Anna University, on Monday.

Speaking on the occasion, Mr. Palanivel Thiaga Rajan said, "The Government is committed to creating a strong innovation ecosystem not just in Chennai but across Tier-II and Tier-III cities. The establishment of the Tiruchi Regional Hub reflects our vision to decentralise opportunities, empower local talent, and drive inclusive growth. This hub will become a launchpad for startups, researchers, and entrepreneurs who aspire to make a global impact in deep and emerging technologies."

A similar hub is to be inaugurated in Madurai soon.

Earlier, Mr. Palanivel Thiaga Rajan witnessed a technology showcase by start-ups and student entrepreneurs from the region.

Speaking on the occasion, Mr. Poyyamozhi said, "I am happy to note that memoranda of understanding have been signed with 12 institutions on this occasion. The Government will always extend its full support to young minds, nurturing them to become innovators and entrepreneurs of tomorrow."

According to an official press release, over 40 engineering colleges from Tiruchi region – Tiruchi, Pudukkottai, Tiruvarur, Thanjavur, Perambalur, Nagapattinam, Cuddalore, and Ariyalur - have signed memoranda of understanding (MoU) with iTNT Hub through the JIGSAW (Joint Innovation Gateway for Synergistic Startup - Academic - Industry – Investor Work) platform.

From Tiruchi region alone, 687 researchers, patent holders, and applicants in Deep and Emerging Tech sectors have already been onboarded onto the JIGSAW platform.

The inaugural function also saw the presentation of Deep Tech Hardware Product Design Scheme, offering subsidies for researchers and innovators to convert ideas into minimum viable products (MVPs), and the Tamil Nadu Technology Transfer Facilitation Centre (TNTTFC) for deep tech innovations, funded by the Government of Tamil Nadu.

T. Senthil Kumar, dean, Anna University Regional Campus, Tiruchi, spoke.

THE TIMES OF INDIA

# Trichy gets TN's first regional iTNT hub on Anna univ campus

TIMES NEWS NETWORK

**Trichy:** The Tamil Nadu Technology (iTNT) Hub's regional centre was inaugurated at the University College of Engineering, Anna University campus, on the Trichy–Pudukottai highway on Sunday by state IT and digital services minister Palanivel Thiaga Rajan.

The hub, the first outside Chennai, will support startups and researchers in deep-tech fields such as AI, machine learning, robotics, quantum computing, and emerging areas including cybersecurity, EVs, geospatial technologies, climate tech, and smart cities. A similar hub is planned in Madurai.

"The state government is committed to building a strong innovation ecosystem not just in Chennai but across tier-II and tier-III cities to decentralize opportunities, empower local talent, and drive inclusive growth," the minister said.

R Baskar




**TECH BOOST:** Minister Palanivel Thiaga Rajan inaugurates the Trichy regional hub of Tamil Nadu Technology (iTNT) Hub at Anna University campus on the Trichy–Pudukottai highway on Monday

Earlier, the ministers visited stalls by student entrepreneurs and tech startups from the central region. Local MLA and school education minister Anbil Mahesh Poyyamozhi added, "With just two languages, Tamil and English, our students have reached global levels in IT. That is proof enough of our potential." Over 40 engineering colleges from Trichy, Pudukottai, Tiruvarur, and Thanjavur have signed MoUs with the hub through the JIGSAW (Joint Innovation Gateway for Synergistic Startup–Academic–Industry–Investor Work) platform. So far, 687 researchers, patent holders, and applicants from the region have been onboarded.

The iTNT Hub is funded by the Union Ministry of Electronics and IT, the state government, and academic partners, and will function under the state IT and digital services department.

THE NEW INDIAN EXPRESS

# IT min opens state's first iTNT regional hub at University College of Engineering

**EXPRESS NEWS SERVICE** @ Tiruchy



Minister Palanivel Thiaga Rajan at the iTNT hub in Tiruchy on Monday | EXPRESS

MINISTER for Information Technology Palanivel Thiaga Rajan on Monday inaugurated the first regional centre of the i-Tamil Nadu Technology (iTNT) at Anna University's University College of Engineering located on BIT-Tiruchy campus.

Officials said the facility marks a push to decentralise the state's innovation ecosystem and added that it will support researchers, student entrepreneurs and early-stage ventures with co-working space, mentoring, market access and technology transfer.

At the inaugural event, Rajan said the government's goal was to extend opportunities beyond metropolitan centres. "The Tiruchy hub will give local talent the resources to scale ideas into globally relevant innovations," he said after interacting with student innovators.

According to the IT department, more than 40 engineering colleges from Tiruchy, Pudukkottai, Thanjavur, Tiruvarur, Perambalur, Nagapattinam, Cuddalore and Ariyalur have joined the hub through the JIGSAW platform.

The event also saw the announcement of two initiatives: a Deep Tech Hardware Product Design Scheme to subsidise prototypes and a Technology Transfer Facilitation Centre for deep tech. iTNT Hub is jointly funded by the Union IT ministry, TN government and academic partners.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்




திருச்சி மண்டலத்துக்கான தமிழ்நாடு தகவல் தொழில்நுட்ப மைய திறப்பு விழாவில் அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் பேசியபோது எடுத்த படம். அருகில் அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி மற்றும் பலர் உள்ளனர்.

புதிய கண்டுபிடிப்புகளை ஊக்குவிப்பதற்காக

# 2-ம் கட்ட நகரங்களில் தமிழ்நாடு தொழில்நுட்ப மையம் அமைக்கப்படுகிறது

## அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் தகவல்

திருச்சி, செப்.23-
புதுமையான கண்டுபிடிப்புகளை ஊக்குவிப்பதற்காக 2-ம் கட்ட நகரங்களில் தமிழ்நாடு தொழில்நுட்ப மையம் அமைக்கப்படுகிறது என்று அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் கூறினார்.

### தகவல் தொழில்நுட்ப மையம்

திருச்சி மண்டலத்துக்கான தமிழ்நாடு தகவல் தொழில்நுட்ப மையம் திருச்சி அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த மையத்தின் திறப்பு விழா நேற்று நடைபெற்றது. இந்த விழாவில் சிறப்பு அழைப்பாளர்களாக தகவல்தொழில்நுட்பத்துறை அமைச்சர் பழனிவேல் தியாகராஜன், பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி ஆகியோர் கலந்து கொண்டு மையத்தை திறந்து வைத்து பார்வையிட்டனர்.

விழாவில் அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் பேசியதாவது:-

### புதுமையான கண்டுபிடிப்புகள்

சென்னை மட்டுமின்றி திருச்சி, மதுரை போன்ற வளர்ந்து வரும் 2-ம் கட்ட நகரங்களிலும் தகவல் தொழில்நுட்ப வசதிகளை ஏற்படுத்தி, புதிய கண்டுபிடிப்புகளை ஊக்குவிப்பதற்காக தமிழ்நாடு தொழில்நுட்ப மையம் அமைக்கப்பட்டுள்ளது. சென்னை அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் 2023-ம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்த மையம் மூலம் பல்வேறு துறைகளில் புதுமையான கண்டுபிடிப்புகளை உருவாக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதன் ஒருபகுதியாகவே திருச்சி மண்டலத்தில் தமிழ்நாடு தகவல்தொழில்நுட்ப மையம் திறக்கப்பட்டுள்ளது.

மதுரை மண்டலத்தில் தமிழ்நாடு தொழில்நுட்ப மையம் விரைவில் திறக்கப்படும். உலக அளவில் தாக்கத்தை ஏற்படுத்த விரும்பும் நிறுவனங்கள், கண்டுபிடிப்புகளை ஊக்குவிக்கும் மையமாக இந்த தமிழ்நாடு தொழில்நுட்ப மையம் இருக்கும். இவ்வாறு அவர் பேசினார். அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி பேசியதாவது:-

### 3-வது இடம்

சென்னையில் தொடங்கப்பட்ட தமிழ்நாடு தொழில்நுட்ப மையத்தில் 6 ஆயிரம் ஆய்வாளர்கள், 70 நிறுவனங்கள், 130 கல்லூரிகள் இணைந்து தமிழகத்தை அடுக்கட்டத்துக்கு எடுத்துச்செல்வதற்கான பணிகளை மேற்கொண்டுவருகின்றன. இதன் மூலம் 2 ஆண்டுகளில் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொழில்முனைவோர் பயன்பெற்றுள்ளனர். திருச்சியில் ஆரம்பத்தில் 40 ஸ்டார்ட் அப் நிறுவனங்களே இருந்தன. தற்போது 330-க்கும் மேற்பட்ட ஸ்டார்ட்அப் நிறுவனங்கள் உள்ளன. இதில், தகவல் தொழில்நுட்பத் துறை சார்ந்ததே அதிகம்.

1997-ம் ஆண்டு அப்போதைய முதல்-அமைச்சர் கருணாநிதி தகவல் தொழில்நுட்பக்கொள்கையை உருவாக்கினர். இதன்மூலம் தற்போது மென்பொருள் ஏற்றுமதியில் நாட்டிலேயே தமிழகம் 3-வது இடத்தில் உள்ளது. தமிழக மாணவர்கள் 3-வது மொழியைக் கற்றக்கொண்டால் என்ன தவறு என்று கேட்கின்றனர். ஆனால், இருமொழியிலேயே நாங்கள் உலக அளவில் சாதித்துக்கொண்டிருக்கும்போது இன்னொரு மொழி எதற்கு. இவ்வாறு அவர் பேசினார்.

### 40 கல்வி நிறுவனங்களுடன் ஒப்பந்தம்

திருச்சி மண்டல தமிழ்நாடு தொழில்நுட்ப மையத்துடன் 40-க்கும் மேற்பட்ட பொறியியல் கல்லூரிகள் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளன.

விழாவில் தகவல் தொழில்நுட்பத்துறை முதன்மைசெயலாளர் பிரஜேந்திர நவ்னித், தகவல்தொழில்நுட்பமையத்தின் தலைமை செயல் அதிகாரி வனிதா வேணுகோபால், திருச்சி அண்ணா பல்கலைக்கழக வளாக பொறியியல் கல்லூரியின் புலமுதல்வர் செந்தில்குமார் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# 4 பசுமாடுகள் திருட்டு

உப்பிலியபுரம், செப்.23-
கொப்பம்பட்டி ஊராட்சிக்கு உட்பட்ட ராஜபாளையம் பகுதியை சேர்ந்தவர் முத்தையா (வயது 55). இவர் தனக்கு சொந்தமான தோட்டத்தில் கட்டியிருந்த பசுமாடு, கொப்பம்பட்டியைச் சேர்ந்த துரைசாமி என்பவருக்கு சொந்தமான தோட்டத்திலிருந்து பசுமாடு, கண்ணன் என்பவருக்கு சொந்தமான தோட்டத்திலிருந்து 2 பசுமாடுகள் ஆகியவை மர்ம நபர்கள் திருடிச்சென்றனர். இது குறித்த புகாரின்பேரில் துறையூர் இன்ஸ்பெக்டர் முத்தையா, உப்பிலியபுரம் சப்-இன்ஸ்பெக்டர் கருப்பண்ணன் மற்றும் போலீசார் சம்பவ இடத்திற்கு சென்று விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

திருச்சி தில்லைநகர் படிப்பு மையம், LSC
பல்கலைக்கழக மானியக்குழுவின் தொலைதூரக்கல்வி குழு
(UGC-DEB) அங்கீகாரம் பெற்றது.
தொலைக்கல்வி மையம்

| UG | PG |
| --- | --- |
| B.A., B.A.Tamil., B.Com., B.B.A., B.Sc., B.C.A., B.L.I.Sc. | M.A., M.Com., M.A. (HRM), M.Sc., M.L.I.Sc., M.Com. (BM/FM) |
| MBA | MCA |

சாலை ரோடு, தில்லைநகர் 1வது கிராஸ், திருச்சி-18.
(ஜெயந்தி பஸ் ஸ்டாப் அருகில், Next to IDBI Bank)
Cont.: 9843224700, 9843224702, 9943436935.

இந்து தமிழ் திசை
தமிழால் இணைவோம்

# பள்ளி மாணவர்களுக்கு ஏஐ, ரோபோடிக்ஸ் பயிற்சி

## அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் தகவல்

திருச்சி

தமிழக அரசின் தகவல் தொழில் நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறையின் கீழ் இயங்கும் தமிழ்நாடு தொழில்நுட்ப மையத்தின் திருச்சி மண்டல மையம் தொடக்க விழா, மண்டையூரில் உள்ள அண்ணா பல்கலைக்கழக திருச்சி வளாகத்தில் நேற்று நடைபெற்றது.

தமிழ்நாடு தொழில்நுட்ப மையத்தின் தலைமைச் செயல் அலுவலர் வனிதா வேணுகோபால் வரவேற்றார். அரசின் தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறையின் முதன்மைச் செயலர் பிரஜேந்திர நவ்நீத் நோக்கவுரையாற்றினார்.

பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பேசியது:

தகவல் தொழில்நுட்பத் துறையில் நவீன தொழில்நுட்பம் சார்ந்து மேம்படுத்திக் கொள்வதற்காக இந்த மையம் தொடங்கப்பட்டுள்ளது. ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு, நவீன தொழில் நுட்பம் குறித்த தகவல் மற்றும் பயிற்சி ஆகியவற்றை அளிப்பதற்காக 2023-ல் இம்மையம் சென்னையில் தொடங்கப்பட்டது. குறுகிய காலத்திலேயே 2,700 தொழில் நிறுவனங்கள் பயனடையும் அளவுக்கு வளர்ந்துள்ளது.




அண்ணா பல்கலைக்கழக திருச்சி வளாகத்தில் நேற்று நடைபெற்ற தமிழ்நாடு தொழில்நுட்ப திருச்சி மண்டல மையம் தொடக்க விழாவில் பேசிய தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன். உடன், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி உள்ளிட்டோர்.

தமிழகம் திறன் வாய்ந்த மாநிலமாக திகழ இருமொழிக் கொள்கையே காரணம். இது, மத்திய அரசுக்கும் தெரியும். இருப்பினும் வீண் வாதத்துக்காக திணிக்க முயற்சிக்கின்றனர்.

அரசு அளிக்கும் வாய்ப்புகளைப் பயன்படுத்தி தொழில் முனைவோர் முன்னேற வேண்டும் என்றார்.

தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் பேசியது:

சென்னைக்கு அடுத்து மண்டல அளவிலான அறிவுசார் சொத்துரிமை சார்ந்த தொழில்முனைவோர் மையம் திருச்சியில் தொடங்கப்பட்டுள்ளது. தகவல் தொழில் நுட்பத் துறையில் மிகச் சிறந்த நிபுணர்களை உருவாக்கும் வகையில் பள்ளி அளவிலேயே மாணவர்களுக்கு செயற்கை நுண்ணறிவு, ரோபோடிக்ஸ் உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளில் பயிற்சி அளிக்கும் முயற்சியில் தமிழக பள்ளிக் கல்வித் துறை ஈடுபட்டுள்ளது.

தமிழ்நாடு தொழில்நுட்ப மையத்தின் வசதி வாய்ப்புகளை பயன்படுத்திக் கொண்டு மேலும், மேலும் ஸ்டார்ட் அப் நிறுவனங்கள் உருவாக வேண்டும் என்றார்.

அண்ணா பல்கலைக்கழக திருச்சி வளாக டீன் செந்தில்குமார் நன்றி கூறினார்.

தினமணி



# புதுமையான கண்டுபிடிப்புகளை ஊக்குவிக்கும் தமிழ்நாடு தகவல் தொழில்நுட்ப மையம்

## அமைச்சர் பழனிவேல் தியாகராஜன்



திருச்சி அண்ணா பல்கலைக்கழகத்தில் திங்கள்கிழமை மண்டல தகவல் தொழில்நுட்ப மையத்தை திறந்துவைத்து பார்வையிட்ட அமைச்சர் பழனிவேல் தியாகராஜன். உடன், கல்லூரி நிர்வாகிகள் உள்ளிட்டோர்.

திருச்சி, செப். 22: தொழில்முனைவோர், ஆராய்ச்சியாளர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரின் புதுமையான கண்டுபிடிப்புகளை ஊக்குவிக்கும் மையமாக தமிழ்நாடு தகவல் தொழில்நுட்ப மையம் இருக்கும் என்று தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் பேசினார்.

திருச்சி மண்டலத்துக்கான தமிழ்நாடு தகவல் தொழில்நுட்ப மையம் திருச்சி அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த மையத்தை அமைச்சர்கள் பழனிவேல் தியாகராஜன், அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆகியோர் திங்கள்கிழமை திறந்துவைத்தனர்.

பின்னர், அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் பேசியதாவது:

**மதுரை மண்டலத்தில் விரைவில் தகவல் தொழில்நுட்ப மையம்:** சென்னை அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் கடந்த 2023-ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இம்மையத்தின் ஒருபகுதியாகவே திருச்சி மண்டலத்தில் தமிழ்நாடு தகவல்தொழில்நுட்ப மையம் திறக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து மதுரை மண்டலத்தில் தமிழ்நாடு தகவல் தொழில்நுட்ப மையம் விரைவில் திறக்கப்படும். உலக அளவில் தாக்கத்தை ஏற்படுத்த விரும்பும் நிறுவனங்கள், ஆராய்ச்சியாளர்கள், தொழில்முனைவோர், பட்டதாரிகள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரின் புதுமையான கண்டுபிடிப்புகளை ஊக்குவிக்கும் மையமாக தமிழ்நாடு தகவல் தொழில்நுட்ப மையம் இருக்கும். நாட்டின் மக்கள் தொகையில் 6 சதவீதம் மட்டுமே உள்ள தமிழகத்தில் இருந்து ஆண்டுதோறும் 20 சதவீதப் பட்டதாரிகளை உருவாக்கி வருகிறோம் என்றார்.

தொடர்ந்து அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பேசியதாவது:

**மென்பொருள் ஏற்றுமதியில் நாட்டிலேயே தமிழகம் 3-ஆவது இடம்:** தமிழ்நாடு தகவல் தொழில்நுட்ப மையத்தை சென்னையில் கடந்த 2023-ஆம் ஆண்டு முதல்வர் திறந்துவைத்தார். இதன்மூலம் கடந்த இரண்டாண்டுகளில் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொழில்முனைவோர் பயன்பெற்றுள்ளனர். திருச்சியில் ஆரம்பத்தில் 40 ஸ்டார்ட் அப் நிறுவனங்கள் மட்டுமே இருந்தன. தற்போது 330-க்கும் மேற்பட்ட ஸ்டார்ட்-அப் நிறுவனங்கள் உள்ளன.

இதில், தகவல் தொழில்நுட்பத் துறை சார்ந்ததே அதிகம். 1997 -ஆம் ஆண்டு அப்போதைய முதல்வர் கருணாநிதி தகவல் தொழில்நுட்பக் கொள்கையை உருவாக்கினார். இதன்மூலம் தற்போது மென்பொருள் ஏற்றுமதியில் நாட்டிலேயே தமிழகம் 3-ஆவது இடத்தில் உள்ளது என்றார்.

**40 கல்வி நிறுவனங்களுடன் ஒப்பந்தம்:** திருச்சி மண்டல தமிழ்நாடு தொழில்நுட்ப மையத்துடன் புதுக்கோட்டை, திருவாரூர், தஞ்சாவூர், பெரம்பலூர், நாகப்பட்டினம், கடலூர் மற்றும் அரியலூர் மாவட்டங்களைச் சேர்ந்த 40-க்கும் மேற்பட்ட பொறியியல் கல்லூரிகள் JIG SAW (Joint Gateway for Synergistic Startup-Academic-Industry-Investor Work) புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளன.

இந்த நிகழ்ச்சியில் தகவல் தொழில்நுட்பத் துறை முதன்மை செயலாளர் பிரஜேந்திர நவ்னித், தமிழ்நாடு தகவல் தொழில்நுட்ப மையத்தின் தலைமை செயல் அதிகாரி வனிதா வேணுகோபால், திருச்சி அண்ணா பல்கலைக்கழக வளாக பொறியியல் கல்லூரியின் புலமுதல்வர் த.செந்தில்குமார் மற்றும் தொழில்முனைவோர், மாணவர்கள் கலந்துகொண்டனர்.

தினமலர்

# அமெரிக்காவில் இருந்து திரும்பும் இந்திய நிபுணர்கள்

## மத்திய, மாநில அரசுகள் பயன்படுத்த அமைச்சர் வலியுறுத்தல்

**திருச்சி, செப். 23—**

திருச்சி அண்ணா பல்கலைக்கழக (பிட்) வளாகத்தில் திருச்சி மண்டல தமிழ்நாடு தொழில்நுட்ப மையம் தொடக்க விழா நேற்று நடந்தது.

தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் மையத்தை தொடங்கி வைத்து பேசியது: தமிழக அரசு தகவல் தொழில்நுட்ப வசதிகள் அனைத்து மாவட்டத்துக்கும் கொண்டு செல்ல வேண்டும் என்ற நோக்கில் திருச்சி அண்ணா பல்கலைக்கழகத்தில் தொழில்நுட்ப மையத்தை தொடங்கியுள்ளது. விரைவில் மதுரையில் தொடங்கப்பட உள்ளது. வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களை உலகளவில் எடுத்து செல்லும் வகையில் இம்மையம் செயல்படும். இது ஆராய்ச்சியாளர்கள், தொழில் முனைவோருக்கு பயனுள்ளதாக உள்ளது. அமெரிக்காவின் அறிவிப்புகள் காரணமாக திறமையான பல்துறை நிபுணர்கள் நாடு திரும்பும் நிலை ஏற்பட்டுள்ளது. இதை மத்திய, மாநில அரசுகள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இந்திய மக்கள் தொகையில் 6 சதவீதம் உள்ள தமிழர்களில் 20 சதவீதம் பேர் பட்டதாரிகளாக உள்ளனர். தகவல் தொழில்நுட்பம், ஸ்மார்ட் கிளாஸ் உள்ளிட்ட வசதிகள் நடுநிலை பள்ளிகளில் தொடங்கப்பட்டுள்ளது.




திருச்சி அண்ணா பல்கலைக்கழக (பிட்) வளாகத்தில் திருச்சி மண்டல தமிழ்நாடு தொழில்நுட்ப மையத்தை அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் தொடங்கி வைத்து பேசினார். அருகில் அமைச்சர் மகேஷ் பொய்யாமொழி, முதன்மை செயலாளர் பிரஜேந்திர நவனீத், தலைமை நிர்வாக அதிகாரி வனிதா வேணுகோபால், புல முதல்வர் செந்தில்குமார், பிட் இயக்குனர் அசித்குமார் பர்மா.

இதை இன்னும் தீவிரமாக செயல்படுத்த அமைச்சர் மகேஷ் பொய்யாமொழி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மாறி வரும் தொழில்நுட்ப மாற்றத்திற்கு ஏற்ற வகையில் நம்மை தயார்படுத்திக் கொள்ள வேண்டும், என்றார்.

### தமிழகம் 3ம் இடம்

அமைச்சர் மகேஷ் பொய்யாமொழி பேசியது: தகவல் தொழில்நுட்பம், செயற்கை நுண்ணறிவு உள்ளிட்ட பல்வேறு செயல்பாடுகள் மூலம் தமிழகத்தை அடுத்த கட்டத்திற்கு எடுத்து செல்ல முதல்வர் பல திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். 2023ல் சென்னையில் முதல்வர் தொடங்கிய மையம் தற்போது திருச்சியில் தொடங்கப்படுகிறது. இம்மையத்தை திருச்சி சுற்றுப்புற தொழில்முனைவோர், ஆராய்ச்சியாளர்கள் பயன்படுத்தி மேம்பாடு அடையலாம். இதன் மூலம் 6 ஆயிரம் ஆராய்ச்சியாளர்கள், 5 ஆயிரம் தொழில் முனைவோர் பயனடைந்துள்ளனர்.

மென்பொருள் உற்பத்தியில் 3வது இடத்தில் தமிழகம் உள்ளது. பள்ளி மாணவர்களுக்கு செயற்கை நுண்ணறிவு, ரோபோட் மற்றும் அறிவு சார்ந்த பயிற்சிகள் அளிக்கப்படுகிறது. பல்வேறு சிறந்த திட்டங்கள் மூலம் தமிழகத்தை அடுத்த கட்டத்திற்கு எடுத்து செல்லும் வகையில் முதல்வர் செயலாற்றி வருகிறார், என்றார்.

புதுகை, திருவாரூர், தஞ்சாவூர், பெரம்பலூர், நாகை உள்ளிட்ட திருச்சி மண்டலத்தை சேர்ந்த 40க்கும் மேற்பட்ட பொறியியல் கல்லூரிகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டது. தமிழக தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவை துறை முதன்மை செயலாளர் பிரஜேந்திர நவனீத், தலைமை நிர்வாக அதிகாரி வனிதா வேணுகோபால், பிம் இயக்குனர் அசித்குமார் பர்மா உட்பட பலர் கலந்து கொண்டனர். பிட் வளாக புல முதல்வர் செந்தில் குமார் நன்றி கூறினார்.

தினகரன்

# மென்பொருள் ஏற்றுமதியில் நாட்டிலேயே தமிழகம் 3ம் இடம்

## அமைச்சர் அன்பில் மகேஷ் பெருமிதம்




திருவெறும்பூர் அருகே உள்ள அண்ணா பல்கலை கழக வளாகத்தில் தமிழ்நாடு தொழில்நுட்ப மையத்தின் திருச்சி மண்டல மையம் தொடக்க விழா நடைபெற்றது. விழாவில் அமைச்சர்கள் பழனிவேல் தியாகராஜன், அன்பில் மகேஷ் கலந்து கொண்டனர்.

திருவெறும்பூர், செப்.23: தமிழ்நாடு திறன் வாய்ந்த மாநிலமாக இருப்பதற்கு இருமொழிகொள்கைதான் காரணம் என தெரிந்தும் வீண் வாதத்திற்காக ஒன்றிய அரசு ஏதாவது ஒன்றை நம்மீது திணிக்கிறது என தர்மேந்திர பிரதானுக்கு அமைச்சர் அன்பில் மகேஷ் பதிலடி கொடுத்துள்ளார்.

தமிழ்நாடு அரசின் தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறையின் கீழ் இயங்கும் தமிழ்நாடு தொழில்நுட்ப மையத்தின் திருச்சி மண்டல மையம் தொடக்கவிழா திருவெறும்பூர் அருகே உள்ள அண்ணா பல்கலை கழக வளாகத்தில் நேற்று நடந்தது. தலைமை செயல் அலுவலர் வனிதா வரவேற்றார். முதன்மை செயலர் பிரஜேந்திர நவ்நீத் தலைமை உரையாற்றினார். மண்டல அளவிலான தொழில்நுட்ப மையத்தை தகவல் தொழில் நுட்பத்துறை அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் திறந்து வைத்தார்.

விழாவில் பள்ளி கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பேசியதாவது: தகவல் தொழில்நுட்பத்துறையில் நவீன தொழில்நுட்பம் சார்ந்து நம்மை மேம்படுத்தி கொள்வதற்காக இந்த மையம் தொடங்கப்பட்டுள்ளது. ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு, நவீன தொழில் நுட்பம் குறித்த தகவல் மற்றும் பயிற்சி ஆகியவற்றை அளிப்பதற்காக 2023ல் இந்த மையம் சென்னையில் தொடங்கப்பட்டது. குறுகிய காலத்திலேயே 2,700 தொழில் நிறுவனங்கள் பயனடையும் அளவுக்கு வளர்ந்துள்ளது. திருச்சி மற்றும் அதை சுற்றியுள்ள மாவட்ட மக்களின் நலன் கருதி சென்னைக்கு அடுத்து இப்போது திருச்சியில் மண்டல மையம் தொடங்கப்பட்டுள்ளது. மூன்றாவது மொழியை கற்றுக்கொள்ள வேண்டும் என ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் மீண்டும் மீண்டும் கூறுகிறார். தகவல் தொழில்நுட்பம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் தமிழ்நாடு வளர்ந்துள்ளது. தமிழ் எங்களது அடையாளம். ஆங்கிலம் எங்களுக்கான இணைப்பு மொழி. இருமொழி கொள்கை மூலம் தமிழர்கள் உலகம் முழுவதும் பரந்து விரிந்து பல்வேறு துறைகளில் சாதித்து வருகிறார்கள். அரசின் நிதியை முறையாக பயன்படுத்தி, தமிழ்நாடு திறன் வாய்ந்த மாநிலமாக இருக்க இருமொழி கொள்கை தான் காரணம். அது மத்திய அரசுக்கும் தெரியும். இருந்தபோதும் வீண் வாதத்துக்காக நம் மீது ஏதாவது ஒன்றை திணிக்கிறார்கள்.

திருச்சியில் கொரோனாவுக்கு முன்பு 40 ஆக இருந்த ஸ்டார்ட் அப் நிறுவனங்கள் எண்ணிக்கை தற்போது 330 ஆக உயர்ந்துள்ளது. திருச்சி மிக வேகமாக தொழில் நுட்பத்துறையில் வளர்ந்து வருகிறது. தொலைநோக்கு பார்வையுடன் நமது முன்னாள் முதல்வர் கருணாநிதி உருவாக்கிய தகவல் தொழில்நுட்ப கோட்பாடு காரணமாக இன்று தமிழகம் நாட்டிலேயே மென்பொருள் ஏற்றுமதியில் 3வது இடத்தில் உள்ளது. இதுபோன்ற வாய்ப்புகளை பயன்படுத்தி கொண்டு தொழில்முனைவோர்கள் முன்னேற வேண்டும். இவ்வாறு அவர் பேசினார். திருச்சி அண்ணா பல்கலை கழக டீன் முனைவர் செந்தில்குமார் நன்றி கூறினார்.

THE TIMES OF INDIA

# Trichy gets state's first regional iTNT hub

TNN / Sep 22, 2025, 21:25 IST

Share AA Preferred on G




Trichy: The Tamil Nadu Technology (iTNT) Hub's regional centre was inaugurated at the University College of Engineering, Anna University campus, on the Trichy–Pudukottai highway on Sunday by state IT and digital services minister Palanivel Thiaga Rajan.

The hub, the first outside Chennai, will support startups and researchers in deep-tech fields such as AI, machine learning, robotics, quantum computing, and emerging areas including cybersecurity, EVs, geospatial technologies, climate tech, and smart cities. A similar hub is planned in Madurai.

"The state government is committed to building a strong innovation ecosystem not just in Chennai but across tier-II and tier-III cities to decentralize opportunities, empower local talent, and drive inclusive growth," the minister said.

Earlier, the ministers visited stalls by student entrepreneurs and tech startups from the central region. Local MLA and school education minister Anbil Mahesh Poyyamozhi added, "With just two languages, Tamil and English, our students have reached global levels in IT. That is proof enough of our potential."

Over 40 engineering colleges from Trichy, Pudukottai, Tiruvarur, and Thanjavur have signed MoUs with the hub through the JIGSAW (Joint Innovation Gateway for Synergistic Startup–Academic–Industry–Investor Work) platform. So far, 687 researchers, patent holders, and applicants from the region have been onboarded.

The iTNT Hub is funded by the Union Ministry of Electronics and IT, the state government, and academic partners, and will function under the state IT and Digital Services Department.

dailyhunt




# திருச்சியில் மண்டல அளவில் அறிவுசார் சொத்துரிமை சார்ந்த தொழில்முனைவோர் (iTNT) மையத்தின் துவக்கம்.!

6d · 60 shares

திருச்சியில் உள்ள அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் திருச்சி மண்டல அளவில் அறிவுசார் சொத்துரிமை சார்ந்த தொழில்முனைவோர் (iTNT) மையத்தின் துவக்க விழா நடைபெற்றது.



பள்ளிக்கல்வி துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தொழில்நுட்ப துறை அமைச்சர் பி.டி.பழனிவேல் தியாகராஜன் பங்கேற்றனர்.

அதில்,பள்ளிக்கல்வி துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பேசுகையில்,

மூன்றாவது மொழியை கற்று கொள்ள வேண்டும் என ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் மீண்டும் கூறுகிறார்.

தகவல் தொழில்நுட்பம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் தமிழ்நாடு வளர்ந்துள்ளது. தமிழ் எங்களது அடையாளம். ஆங்கிலம் எங்களுக்கான இணைப்பு மொழி. இரு மொழி கொள்கை மூலம் தமிழர்கள் உலகம் முழுவதும் பரந்து விரிந்து பல்வேறு துறைகளில் சாதித்து வருகிறார்கள். இங்கு படித்தவர் அமெரிக்காவின் தகவல் தொழில்நுட்ப துறையின் முதன்மை அதிகாரியாக பணியாற்றி வருகிறார். அரசின் நிதியை முறையாக பயன்படுத்தி, தமிழ்நாடு திறன்வாய்ந்த மாநிலமாக இருக்க இரு மொழி கொள்கை தான் காரணம். அது ஒன்றிய அரசுக்கும் தெரியும். தெரிந்திருந்த போதும் வீண் வாதத்திற்காக நம் மீது ஏதாவது ஒன்றை திணிக்கிறார்கள்.

சென்னைக்கு அடுத்தபடியாக திருச்சியில் முதல்முறையாக எனது தொகுதியில் இந்த மையம் துவங்கப்பட்டிருப்பதை வரவேற்கிறேன்.

அனைவருக்கும் சமமான வாய்ப்புகளையும், அனைவருக்குமான வளர்ச்சியையும் ஏற்படுத்திக்கொடுக்கிறோம்.

படித்த மாணவர்கள் அறிவுசார் சொத்துரிமை மையத்தை முறையாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றார்.

தொழில்நுட்ப துறை அமைச்சர் பி.டி.பழனிவேல் தியாகராஜன் பேசுகையில் ...

நான் மதுரையை சேர்ந்தவன். அதேசமயம் நான் திருச்சியில் உள்ள தேசிய தொழில்நுட்பக் கழகத்தில் பயின்றவன்.

அந்த நன்றி கடனுக்காக, சென்னைக்கு அடுத்தபடியாக மண்டல அளவிலான அறிவுசார் சொத்துரிமை சார்ந்த தொழில்முனைவோர் (iTNT) மையத்தை திருச்சியில் துவக்கிவைத்துள்ளேன். இதனை தொடர்ந்து மதுரையிலும் தொடங்க இருக்கிறோம் என்று பேசினார். அறிவுசார் சொத்துரிமை சார்ந்த தொழில்முனைவோர் (iTNT) மையத்தின் மூலமாக, தொழில்முனைவோர் ஊக்குவிப்பு, நிதி உதவி, கண்டுபடிப்பு, உற்பத்தி பொருட்கள் சந்தைப்படுத்தல், வணிகமயமாக்கல், பொருள்கள் வடிவமைப்பு, அறிவுசார் சொத்து பாதுகாப்பு, தொழில்நுட்ப பறிமாற்றம், கூட்டுஉழைப்பு, இயக்கம், தயாரிப்பு யோசனை ஆகியவற்றை பெறமுடியும் என பேசினார்.

Dailyhunt

Disclaimer: This content has not been generated, created or edited by Dailyhunt.
Publisher: Red Tamil Tv

**Thanthi TV:**
https://www.youtube.com/live/ivVG5cM7aqk?si=__MvvbbwG1KqOIsC

**Polimer News:**
https://www.youtube.com/live/Lal8BhYTY_E?si=4Cpcw_Nj4JCQPApY

**News18 Tamil Nadu:**
https://www.youtube.com/live/4fs9zk3AwdU?si=0kY1kQubJ_8-1ixH